## மக்களுக்கான அரசாக, மகளிருக்கான அரசாக, மாணவர்களுக்கான அரசாக

# திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது!

### திருச்சி தெற்கு கே.என்.சேகரன் இல்லத் திருமண விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**திருச்சி,ஜூலை 16–**

**திருச்சி காட்டூரில், திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரனின் மகனும் திருச்சி திருவெறும்பூர் பகுதிக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான சிவக்குமார் – மருத்துவர் பவதாரிணி ஆகியோரின் திருமணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``மக்களுக்கான அரசாக, மகளிருக்கான அரசாக, மாணவர்களுக்கான அரசாக திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

திருமண வாழ்வில் அடியெடுத்து வைக்கும் தம்பி சிவக்குமார் – பவதாரிணி இணையர் பெரியாரும் – பகுத்தறிவும் போல, அண்ணாவும் – மாநில சுயாட்சியும் போல, கலைஞரும் – கழகமும் போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் – திராவிட மாடலும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி மகிழ்ந்தோம்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் கே.என்.சேகரன் அவர்களின் இல்லத் திருமண விழாவை உங்கள் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இன்றைக்கு இல்வாழ்க்கையில் இணைகின்ற அண்ணன் கே.என். சேகரன் அவர்களின் மகன் திருவெறும்பூர் பகுதிக் கழகச் செயலாளர் சிவக்குமார், மருத்துவர் பவதாரணி இணையருக்கு உங்கள் சார்பாக எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருமண விழாவிற்கு வருகின்ற வழியெங்கும் ஒரு சிறப்பான வரவேற்பை அளித்து, திருமண விழாவில் கலந்துகொள்கின்ற இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு, இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி மாவட்டத்திற்கு எப்போது வந்தாலும் ஒரு தனி உற்சாகம் பிறக்கும். ஏனென்றால், தீரர் கூட்டமாம் திருச்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு பல திருப்பு முனைகளைத் தந்த மாவட்டம்.

### வெற்றிகளுக்கு அடித்தளம்

கழகத்தின் பல தேர்தல் வெற்றிகளுக்கு அடித்தளம் இட்ட பல மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் திருச்சி மாவட்டத்தில்தான் நடைபெற்று இருக்கின்றன.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.07.2025) திருச்சிராப்பள்ளியில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.என்.சேகரன் அவர்களின் மகன் பகுதிக்கழக செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான சிவக்குமார் – மருத்துவர் பவதாரிணி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் கே.என். நேரு, இ. பெரியசாமி, எஸ்.எஸ். சிவசங்கர், முனைவர் கோவி. செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவிஞர் சல்மா, துரை வைகோ. சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞரணியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருச்சி எந்த அளவிற்கு கழகத்திற்கு முக்கியமான மாவட்டம் என்றால், கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்களைத் தந்தது இந்த திருச்சி மாவட்டம்தான். கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் சிவா அவர்களைத் தந்ததும் இந்த திருச்சி மாவட்டம். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு தமிழ்நாட்டின் சிறந்த ஒரு பள்ளிக்கல்வித் துறை அமைச்சரைத் தந்ததும் உங்களின் திருச்சி மாவட்டம்தான். அப்படிப்பட்ட திருச்சியில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்தான் அண்ணன் சேகரன் அவர்கள்.

### தூய்மையான உடன்பிறப்பு

சேகரன் அவர்களைப் பொறுத்தவரைக்கும், கழகத்தின் மிக தூய்மையான ஒரு உடன்பிறப்பு என்று சொன்னால் அது மிகையாகாது. தலைமை என்ன சொல்கிறதோ, தலைவர் என்ன நினைக்கிறாரோ, என்ன கட்டளை இடுகிறாரோ அதைக் களத்தில் செயல்படுத்திக் காட்டுகின்ற செயல்வீரர் அண்ணன் சேகரன் அவர்கள். இன்றைக்கு, அண்ணன் சேகரன் அவர்கள் படிப்படியாக உழைத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்ற பொறுப்புக்கு வந்திருக்கிறார்.

குறிப்பாக, கழகம் இக்கட்டான நேரங்களைச் சந்திக்கும்போதெல்லாம், இந்த திருவெறும்பூர் பகுதியில் கழகத்தைக் கட்டிக் காத்தவர் அண்ணன் சேகரன் அவர்கள்.

2001-ஆம் ஆண்டு முதல் 2011- ஆம் ஆண்டு வரை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி பல திட்டங்களை இந்தப் பகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார் சேகரன் அவர்கள். குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், திருச்சி, அண்ணா நகரில் அரசால் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இடங்களை விற்க முடியாமல் அந்தப் பகுதி மக்கள் தவித்து வந்தனர். அந்த மக்களின் 30 ஆண்டு கால பிரச்சினையை கலைஞர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அரசிடமிருந்து 2006-ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் சேல் டீட் (Sale Deed) என்று சொல்லப்படும் விற்பனைப் பத்திரம் பெற்றுக் கொடுத்தவர் அண்ணன் சேகரன் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

### கூட்டுக்குடிநீர்த் திட்டம்

காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை திருவெறும்பூரில் உள்ள அத்தனை குடும்பங்களுக்கும் கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் சேகரன் அவர்கள். திருவெறும்பூர் பகுதியில் இன்றைக்கு `டைடல் பார்க்' அமைந்திருக்கிறது என்றால், அதற்கும் காரணம் அவர்தான். 2016-ஆம் ஆண்டு நண்பர் அன்பில் மகேஷ் அவர்கள் முதல்முதலாக சட்டமன்ற தேர்தலில் இந்த திருவெறும்பூர் தொகுதியில் போட்டியிடலாம் என்று முடிவெடுக்கும் போது, நம் தலைவர் அவர்கள் அண்ணன் சேகரன் அவர்களைத்தான் முதலில் அழைத்தார். ``மகேஷ் அவர்களை உன்னிடத்தில் ஒப்படைக்கிறேன். அவரை எப்படியாவது வெற்றிபெற வைக்க வேண்டும் என்று அண்ணன் சேகரன் அவர்களிடம் நம் தலைவர் அவர்கள் கட்டளையிட்டார்கள். தலைவர் சொன்னபடி மகேஷ் அவர்கள் இரண்டு முறை வெற்றிபெற்று இன்றைக்கு அமைச்சராக இருக்கிறார் என்றால், அதற்கு முழுக்காரணம் அண்ணன் சேகரன் அவர்களின் ஒத்துழைப்பும், அவரின் உழைப்பும்தான்.

### கழகப்பணி, மக்கள் பணி

அண்ணன் சேகரனின் வழியில், இன்றைக்கு இங்கு மணமகனாக இருக்கின்ற தம்பி சிவக்குமாரும் கழகப்பணி, மக்கள் பணி என இரண்டையும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார். எனவே, இப்படிப்பட்ட கழகத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்ற அந்த வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நிறைய நிறைய மகளிர் வந்திருக்கிறீர்கள். உங்களுக்குச் தெரியும் நம் அரசு திராவிட மாடல் அரசு. மகளிருக்கான அரசாக நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து செய்துகொண்டு இருப்பவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான கையெழுத்து, விடியல் பயணம் திட்டம். கிட்டத்தட்ட இந்த நான்கு வருடங்களில் மட்டும், தமிழ்நாடு முழுக்க 730 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

### 8 லட்சம் மாணவர்கள்

பெண்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்தான் புதுமைப்பெண் திட்டம். வருடந்தோறும் கிட்டத்தட்ட 8 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுகிறார்கள். பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்விப் படிக்க எந்தக் கல்லூரிக்குச் சென்று படித்தாலும் மாதந்தோறும் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்து படிக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். இதற்கெல்லாம் மகுடம் சூட்டியது போல ஒரு திட்டம். அதுதான் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். நம் முதலமைச்சர் அவர்கள் 22 மாதங்கள் கொடுத்திருக்கிறார். மாதந்தோறும் 1,000 ரூபாய் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. சில பேருக்கு உரிமைத் தொகை வராமல் விடுபட்டு இருக்கிறது. அவர்களின் மனுவும் சரிபார்க்கப்பட்டு, தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். எனவே, மக்களுக்கான அரசாக, மகளிருக்கான அரசாக, மாணவர்களுக்கான அரசாக நம் அரசு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இன்னும் 8 மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. இங்கு அனைவரும் குறிப்பிட்டதைப் போல, ஓரணியில் தமிழ்நாடாக நாம் திரண்டு, நம் முதலமைச்சர் அவர்களை இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வைக்க வேண்டும் என்றால், இங்கு திருமண விழாவிற்கு வந்திருக்கின்ற நீங்கள் அத்தனை பேரும் அடுத்த 8 மாதங்களுக்கு, அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக்கொண்டு போய் பிரச்சாரம் செய்து நீங்கள் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மணமக்கள் இருவரும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, சுயமரியாதையுடன் எதற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ, அதற்கு மட்டும் விட்டுக்கொடுத்துவிட்டு, எதற்குப் பிடிவாதமாக இருக்க வேண்டுமோ அதற்கெல்லாம் பிடிவாதமாக இருந்து வாழ வேண்டுமென மணமக்கள் இருவரையும் வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

தலைவர் அவர்கள் எந்தத் திருமண விழாவை நடத்தி வைத்தாலும், ஒரேயொரு வேண்டுகோள் வைப்பார். மணமக்கள் தங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை, அது பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, ஆண் குழந்தைகயாக இருந்தாலும் சரி அழகான தமிழ்ப் பெயரை சூட்டுங்கள் என்று கூறிக்கொண்டு, மணமக்களை மீண்டும் உங்கள் சார்பாக வாழ்த்தி, அண்ணன் சேகரன் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், சா.சி. சிவசங்கர், நாடாளுமன்ற மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரை வைகோ, சல்மா, அப்துல்லா, மாவட்டக் கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, துரை.சந்திரசேகர், மேயர் அன்பழகன், திருச்சி மாநகரச் செயலாளர் மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின்குமார், பழனியாண்டி, இனிகோ இருதயராஜ், கதிரவன், மருத்துவர் முத்துராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, பரணிகுமார், திருவெறும்பூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர அமைப்பாளர் முத்து தீபக், உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.




**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை மற்றும் திருச்சி மாவட்டங்களுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணமாக சென்று இருந்த நிலையில் திருச்சி மாவட்டத்தில் அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.**





● தந்தை பெரியாரால் திறந்துவைக்கப்பட்டு, திராவிட மாடல் அரசால் ரூ 26.60 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள, பிரான்சிஸ் படிப்பகத்தைத் திறந்து வைத்தார்.



● திருச்சி வடக்கு – தெற்கு – மத்திய மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார்.




● திருச்சியில் ரூ.290 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்துக்கான பணிகளை ஆய்வு செய்தார்.